**கவனிக்க.**-2021.12.03 ஆந் திகதிய 2257 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2258 - 2021 දෙසැම්බර් මස 10 වැනි සිකුරාදා - 2021.12.10

*2258 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1726 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1729 |

**கவனிக்க.**- டாக்டர் எஸ். எஸ். குணவர்தன சுதேச ஆயுர்வேத அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2021, திசெம்பர் மாதம் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, திசெம்பர் மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1723-B 82295-5,403 (2021/ 12)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் திகதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.*

***3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :***

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

*அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.*

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## நீதிச்சேவை ஆணைக்குழு

*அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் உயர் நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளுதல் - 2021*

1. 2088/ 26 ஆம் இலக்கமுடைய 2018.09.11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் உயர் நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்காக தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **சேவை நிபந்தனைகள்.-**

2.1 பகிரங்க சேவையின் நியமனத்தை கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2088/ 26 ஆம் இலக்க மற்றும் 2018.09.11 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் தொடர்பிலான பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நியமங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக் குறிப்பிற்கு செய்யப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் செய்யப்படவுள்ள திருத்தங்களுக்கும் தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்படும் "உயர் நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர்" நியமிக்கப்படுவார்.

2.2 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2088/26 மற்றும் 2018.09.11 ஆந் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் தொடர்பான பிரமாணக் குறிப்பில் அரச மொழிக் கொள்கை நடைமுறைப் படுத்தலுக்கு அமைவாக பிரிவு 12.18 இன் பிரகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள மற்றும்/அல்லது எதிர் காலத்தில் வெளியிடப்படவுள்ள சுற்றுநிருபங் களுக்கு அமைவாக உயர் நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் பதவிக்குரிய மற்றைய அரச மொழி தொடர்பிலான தேர்ச்சியினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

3. **சம்பளம்** : 03/ 2016 மற்றும் அதற்கு அமைவாக நீதிச் சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2016.06.24 ஆந் திகதிய நீதிச்சேவை ஆணைக்குழுவின் 386 ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைவாக, அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் உயர் நீதின்றத்தின் பிரதிப் பதிவாளர் பதவிக்குரிய SL 1-2016 (மாதாந்தம்) ரூபா 47,615.00 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 1,10,895.00 (இப்பதவிக்குரிய ஆரம்ப சம்பளம் SL 1-2016 இற்குரிய சம்பள அளவுக்குரிய 12 ஆவது படிநிலையாகும். அதனடிப்படையில் ஆரம்ப சம்பளம் ரூபா 62,595.00) ஆகும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து சம்பளம் வழங்கப்படும்.

4. இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்குரியது.

5. **தகைமைகள் :**

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

மற்றும்

(ஆ) 2021.12.10 ஆந் திகதிக்கு 30 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

மற்றும்

(இ) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளராக இருத்தல் அல்லது இலங்கை நீதிமன்ற பதிவாளர் சேவையின் தரம் I இல் ஏழு வருடங்கள் உயிர்ப்பான, திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்த உத்தியோகத்தராக இருத்தல் மற்றும் அப்பதவியில் நிரந்தரமாக்கபட்டிருத்தல் வேண்டும்.

அல்லது

(ஈ) 07 வருடங்களுக்கு குறையாமல் செயல் திறமையுடையவாறு தொழிலில் ஈடுபட்டு வருகின்ற சட்டத்தரணியாக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு.-**

(i) யாதேனும் அமைச்சொன்றில், அரச திணைக்களமொன்றில் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றில் அல்லது அரச சட்ட வாரியமொன்றில் சட்டத்தரணியாக பதவிநிலை உத்தியோகம் ஒன்றில் அல்லது சட்டத் துறை சார் தகைமையில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் அல்லது சட்டக் கல்லூரியொன்றில் சட்டம் தொடர்பான ஆசிரியராக சேவையாற்றிய காலப்பகுதி செயல் திறமையுடையவாறு தொழிலில் ஈடுபட்டு வருகின்ற காலப்பகுதியாக கருதப்படும்.

(ii) தற்போது பகிரங்க சேவையில், மாகாண அரசாங்க சேவையில் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு உச்ச வய தெல்லை பொருந்தாது.

(உ) சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

(ஊ) பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றப் போதுமான உடல், உள ரீதியிலான தகைமை யினை பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய சகல தகைமைகளையும் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆந் திகதி அல்லது அதற்கு முதல் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

6. அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்ப தாரிகளுக்கு நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைவாக பதவிக்கு பொருத்தமான ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

7. மேலே 05 (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையினை பூர்த்தி செய்வதினூடாக பதவிக்கு சேர்த்துக் கொள்ளப் படும் உத்தியோகத்தர் ஆயின் நியமனம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருட வேலைபார்க்கும் காலத்திற்கு உட்படுவார். 05 (ஈ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்வதினூடாக பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்படும் உத்தியோகத்தர் நியமனம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவார்.

8. தமக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்பதற்கு தவறும் அல்லது நியமனம் பெற்ற பதவியில் கடமைகளை பொறுப்பேற்பதனை மறுக்கும் அல்லது புறக்கணிக்கும் விண்ணப்பதாரிகளின் நியமனத்தை செல்லுபடியற்றதாக்குவதற்கான அதிகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கு அமை வாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு உள்ளது.

9. பொய்யான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை.-

விண்ணப்பதாரி ஒருவர் முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கருதப்படும் யாதேனுமொரு விடயம் தொடர்பான பிழையான கூற்றினை தெரிவித்துள்ளமை அல்லது உண்மையை மறைத் துள்ளமை தெரிவு செய்யப்பட முன்னர் தெரிய வருமாயின் தகைமையற்றவராக ஆக்கப்படலாம். தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமாயின் சேவையிலிருந்து நீக்கப்படலாம் அல்லது அவரது சேவை முடிவுறுத்தப்படலாம்.

10. விண்ணப்பிக்கும் முறை.-

(அ) விண்ணப்பப்படிவ கட்டணம் ரூபா 500.00. ''நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர்'' பெயரில் மக்கள் வங்கி, டாம் வீதிக் கிளையில் பேணிச் செல்லப்படும் 297 100 199 025 039 கணக்கிற்கு எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலும் வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பதாரியின் பெயர், முகவரி எழுதப்பட்ட 9 × 4 அளவுடைய கடித உறையுடன் பதிவுத்தபாலில் அனுப்புவ தினூடாக அல்லது நேரடியாக வந்து ஒப்படைப் பதன் மூலம் விண்ணப்பப்படிவத்தினை பெற்றுக் கொள்ள முடியும். பணம் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டினை பூர்த்தி செய்யும் போது பற்றுச்சீட்டில் உரிய இடத்தில் விண்ணப்பதாரியின் பெயர் மற்றும் முகவரி குறிப்பிடப்படல் வேண்டும்.

(ஆ) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2022.01.10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் ''செயலாளர், நீதிச் சேவை ஆணைக்குழுச் செயலகம், கொழும்பு 12'' என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது நீதிச்சேவை ஆணைக்குழு செயலகத்திற்கு விண்ணப்பதாரி நேரடியாக வந்து ஒப்படைக்க முடியும்.

11. (அ) விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையின் அதிபர் ஒருவரினால், சமாதான நீதவான் ஒருவரினால், சத்திய ஆணையாளரினால், சட்டத் தரணி ஒருவரினால், பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால், முப்படையின் அதிகாரமுடைய உத்தியோகத்தர் ஒருவரினால், பொலிஸ் சேவையில் கெசட்படுத்தப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது பகிரங்க சேவைக்குரிய நிரந்தர பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தரினால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

(ஆ) தற்போது பகிரங்க சேவையில் ஈடுபட்டுள்ள மேற்குறிப்பிட்ட தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப் படிவங்களை தங்களது திணைக்களத் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(இ) எல்லா விதங்களிலும் முழுமையற்ற விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலிடப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் தொலைந்து போதல் மற்றும் தாமதமாக கிடைக்கப்பெறல் என்பது தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

12. 01 தொடக்கம் 11 வரையில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தியாயம்/ பிரிவுகளில் விளக்கமளிக்கப்படாத விடயங்கள் ஏதும் இருப்பின் அது தொடர்பில் நீதிச் சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கு அமை வாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் தீர்மானிப்பார்.

13. இவ் அறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வடிவங்களுக்கிடையில் முரண்பாடுகள் காணப்படின் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலிற்கு அமைவாக செயற்படுதல் வேண்டும்.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எச். எஸ். சோமரத்ன,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
2021, திசெம்பர் 02.

12-379

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி – நுவரெலியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களிற்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 65 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா.த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2022, சனவரி மாதம் 10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. எம். எம். பி. வீரசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2021, திசெம்பர் 02.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| நுவரெலியா | கொத்மலை | பல்லேபனே பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கொத்மலை பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா. |

12-405

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசாங்க சேவை ஆணைக்குழு

### இலங்கை விவசாய சேவையின் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2021

இலங்கை விவசாய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் இலங்கை விவசாய சேவையின் III ஆந் தரத்திற்குரிய இதன் கீழ் 1 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள 162 பதவிகளுக்காக அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சைக்காக பின்வரும் தகைமைகளை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று பூர்த்தி செய்துள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப்படிவம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்னும் வெப் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன் விண்ணப்பப்படிவங்கள் இணையவழி (Online) ஊடாக மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பப்படிவத்தை இணையவழி ஊடாக அனுப்பியதன் பின்னர் அதனை பதிவிறக்கம் செய்து அச்சுப் பிரதியில் விண்ணப்பதாரரின் ஒப்பத்தை உறுதிப்படுத்தி ஏற்புடையதாயின் திணைக்களத் தலைவரின் கையொப்பத்துடன் விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், (தாபனப் பரீட்சை) ஒழுங்கமைப்பு கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், த. பெ. 1503, கொழும்பு என்னும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரை தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

இணையவழி ஊடாக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் திகதி 2021.12.13 மு. ப. 8.00 மணிக்கு ஆரம்பமாகும்.

விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதி கட்டாயம் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும் எனவும் விண்ணப்பப்படிவம் தபால் மூலம் அனுப்பும் போது காணாமல் போனது என்றோ அல்லது தாமதமாகியது என்றோ செய்யும் முறைப்பாடுகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. இறுதித் தினம் வரை தாமதமாவதன் மூலம் ஏற்படக்கூடிய இழப்புகளை விண்ணப்பதாரர்களே ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

**குறிப்பு**.- 1929 ஆம் இலக்க 2015.08.21 ஆந் திகதியிட்ட அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கோரல் அறிவித்தலுக்கு அமைவாக இலங்கை விவசாய சேவையின் III ஆந் தரத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் பட்சத்தில் இணையவழி ஊடாக மீண்டும் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். முன்னைய அறிவித்தலில் குறிப்பிட்ட தினத்தன்று தகைமைகளைப் பூர்த்தி செய்திருந்த பரீட்சார்த்திகளுக்காக இந்த அறிவித்தலில் 5.3 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது. தற்போது அவர்கள் மீண்டும் பரீட்சைக் கட்டணத்தை செலத்த வேண்டிய தேவை இல்லை. முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைத்த விண்ணப்பதாரர்களின் பெயர்ப் பட்டியல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வெப் தளத்திலும் விவசாய அமைச்சின் வெப் தளத்திலும் வெளியிடப்படும்.

இந்த அறிவித்தலில் "இலங்கை விவசாய சேவைப் பிரமாணக் குறிப்பு" என்பது 1880/26 ஆம் இலக்க 2014.09.19 ஆந் திகதி கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசரிக்கப்பட்ட இலங்கை விவசாய சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அதில் இதுவரை மேற்கொண்டதும், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ளதுமான அனைத்துத் திருத்தங்களும் எனப் பொருள்படும். "நியமன அதிகார பீடம்" என்பது அரசாங்க சேவை ஆணைக்குழு எனவும், "செயலாளர்" என்னும் பதம் "விவசாய விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர்" எனவும், "சேவை" என்பது, இலங்கை விவசாய சேவை" எனவும் "நியமனம்" என்பத இலங்கை விவசாய சேவையின் III ஆம் தரத்தைச் சேர்ந்த நியமனம் எனவும், "எழுத்துப் பரீட்சை" என்பது இலங்கை விவசாய சேவையின் III ஆந் தரத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை - 2021 எனவும், வேறு விதத்தில் விபரிக்கப்படாது இருக்குமிடத்து "உத்தியோகத்தர்" என்பது இலங்கை விவசாய சேவை உத்தியோகத்தர் எனவும் பொருள்படும்.

விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2022.01.10 ஆகும்.

இந்தப் பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2022- மாச்சு மாதம் கொழும்பில் மாத்திரம் நடத்தப்படும்.

| துறை | பதவி | வெற்றிட எண்ணிக்கை | பதவி இலக்கம் |
|---|---|---|---|
| விவசாய அபிவிருத்தி | உதவி விவசாயப் பணிப்பாளர் (விவசாய அபிவிருத்தி) | 69 | 1 |
| விவசாய ஆராய்ச்சி | உதவி விவசாயப் பணிப்பாளர் (விவசாய ஆராய்ச்சி) | 88 | 2 |
| விவசாயப் பொருளியல் | உதவி விவசாயப் பணிப்பாளர் (விவசாயப் பொருளியல்) | 05 | 3 |

**குறிப்பு :**

உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர் ஒருவருக்கு விவசாய அபிவிருத்தி, விவசாய ஆராய்ச்சி மற்றும் விவசாய பொருளியல் ஆகிய துறைகளில் ஒன்றுக்கு அல்லது பலவற்றுக்கு விண்ணப்பப்படிவம் மூலம் விண்ணப்பிக்க முடியும்.

**ஆட்சேர்ப்பு முறை :**

2.1 எழுத்துமூலப் பரீட்சை.- எழுத்து மூலப் பரீட்சை பின்வரும் இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாக இருக்கும் என்பதுடன் விடயப்பரப்பு இந்த அறிவித்தலின் முதலாவது பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ளது.

| வினாத்தாள் | காலம் (மணி) | ஆகக்கூடிய புள்ளிகள் | சித்தியடைந்த புள்ளிகள் (ஆகக்குறைந்த) |
|---|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | 1 1/4 | 100 | 40 |
| விடய வினாத்தாள் (உரிய பதவிக்கு பொருத்தமான) | 2 | 100 | 40 |

2.2 எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு வினாத்தாள்களிலும் 40% வீதத்துக்கு அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

2.3 பொதுவான நேர்முகப் பரீட்சை.- எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களின் புள்ளிகளின் திறமை ஒழுங்கு முறையின் அடிப்படையில் நிரப்பப்பட வேண்டிய வெற்றிட எண்ணிக்கையை விட இரண்டு மடங்குக்கு மேற்படாத விண்ணப்பதாரர்களைக் கொண்ட எண்ணிக்கையிலானோர் பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பொதுவான நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது என்பதுடன், விண்ணப்பதாரர்கள் இலங்கை விவசாய சேவை சேவைப் பிரமாணக் குறிப்பில் மற்றும் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உரிய தினத்தன்று பூர்த்தி செய்துள்ளனரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு மாத்திரமே நடைபெறும். நேர்முகப் பரீட்சை சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்.

2.4 மேற்கூறிய பதவிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பித்து, அதில் பல பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்க தகுதியுடைய, போதுமான புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள், அவர்களின் எழுத்துமூல புள்ளிகளின் திறமை மற்றும் பதவிகளுக்கு வழங்கியுள்ள விருப்பத்தைக் கருத்தில் கொண்டு ஒரு பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவர். அத்தகைய விண்ணப்பதாரர்கள் பொதுவான நேர்முகப் பரீட்சையின் போது பதவிகளுக்கான தங்கள் விருப்பத்தின் ஒழுங்குமுறையை எழுத்து மூலம் வழங்க வேண்டும் என்பதுடன், அது எக்காரணம் கொண்டும் பின்னர் மாற்றியமைப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

2.5 நேர்முகப் பரீட்சை சபையினால் விண்ணப்பதார்களின் தகைமைகளைப் பரீட்சித்து அறிக்கையிட்டதன் பின்னர் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் உரிய ஒவ்வொரு பதவிக்கான தகைமைகளை உறுதிப்படுத்திக் கொள்ளும் விண்ணப்பதாரர்களிடையே எழுத்துமூல பரீட்சை புள்ளிகளின் திறமை ஒழுங்கு முறையை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பதவி வெற்றிடங்களுக்கும் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

**3. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நியதிகளும், நிபந்தனைகளும் :**

3.1 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். உங்களுக்கு உரித்தான ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும், ஆண் அலுவலர் ஒருவர் எனின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கும் பெண் உத்தியோகத்தர் ஒருவர் எனின் தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கும் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது பணிப்பு விடுக்கின்றவாறு நீங்கள் அதற்கான பங்களிப்புத் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

3.2 தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு இணங்குதல் வேண்டும்.

3.3 இலங்கை விவசாய சேவை உத்தியோகத்தர்கள், சேவைத் தேவைப்பாடுகளுக்கு அமைவாக அனைத்து மாகாணங்களின் மாகாண அரசாங்க சேவைகளிலும் சேவையாற்றுவதற்கு உட்பட்டு, அதற்காக மாகாண அரசாங்க சேவையின் பதவியில் சேவையாற்றுவதற்கு தற்காலிகமாக விடுவிக்கப்படுவர். அவ்வாறு சேவையாற்ற வேண்டிய

காலப் பகுதியைத் தீர்மானிப்பது சேவையின் தேவைப்பாடு, பணியாட் தொகுதியை ஈடுபடுத்தும் தேவைப்பாடு மற்றும் பிற உரிய விடயங்களுக்கு அமைவாக மாகாண அதிகாரபீடத்துக்கும் மற்றும் நியமன அதிகாரிக்கும் இடையேயான இணக்கப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

(அ) சேவையிலிருந்து விடுவிக்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு நியமனக் கடிதமொன்று மாகாண அதிகார பீடத்தினால் உரிய அலுவலருக்கு வழங்கப்படும். உரிய மாகாண அதிகாரபீடத்தினால் மாகாணத்திற்குள் இடமாற்றம் செய்யப்படுவதற்கும் உட்பட்டுவார்.

(ஆ) மாகாண அரசாங்க சேவைக்கு விடுவிக்கப்பட்டாலும், குறித்த காலத்துக்குள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டுக்கும் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் ஆளாகுதல் வேண்டும்.

(இ) மாகாண அரசாங்க சேவைக்காக விடுவிக்கும் காலம் முடிவடைந்ததும் நிரந்தர சேவைக்கு மீளவும் வருதல் வேண்டும்.

3.4 திறந்த ஆட்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற அலுவலர்கள் 03 ஆண்டு கால தகுதிகாண் காலத்துக்கு உட்படுவதுடன் நியமனத்தை உறுதிப்படுத்தப்படுவதற்கு முன்னர் இலங்கை விவசாய சேவை பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

3.5 ***திறன் விருத்தி.***- சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அலுவலர்களுக்காக விவசாய அபிவிருத்திக்கு உரியதான சமூகப் பொருளாதார, கலாசார மற்றும் சேவையாற்றுகின்ற சூழலில் மேம்பாடு தொடர்பான திறனைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான பயிற்சியொன்று விவசாயத் திணைக்களத்தினால் அல்லது திணைக்களம் அடையாளம் காணும் வேறு நிறுவனத்தினால் (உதாரணமாக - இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்) ஒரு (01) மாத கால பயிற்சிப் பாடநெறியொன்று வழங்கப்படும். பாடநெறி இறுதியில் மேற்கொள்ளப்படுகின்ற மதிப்பீட்டின் பின்னர் சான்றிதழ் ஒன்றும் வழங்கப்படும். பதவியில் உறுதிப்படுத்துவதற்கு இந்தச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

3.6 அரசாங்க சேவை நியமனங்களை நிருவகிக்கின்ற பொது நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இலங்கை விவசாய சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கும் திணைக்கள ஒழுங்கு விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தபானவிதிக்கோவை ஏற்பாடுகள் மற்றும் நிதிப் பிரமாணங்களுக்கும், 1589/30 ஆம் இலக்க 2009.02.20 ஆந் திகதி கொண்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறைவிதிகளுக்கும் (இதனகத்துப் பின்னர் நடைமுறை விதிகள் என அழைக்கப்படும்) மேலே குறிப்பிட்ட நியதிகள், நிபந்தனைகள், ஒழுங்குவிதிகள், ஏற்பாடுகள் மற்றும் விதிகளில் ஏற்கனவே மேற்கொண்டுள்ள அல்லது இதனகத்துப் பின்னர் மேற்கொள்ளவுள்ள திருத்தங்களுக்கும் உட்பட்டு தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் இலங்கை விவசாய சேவையின் III ஆந் தரத்தில் நியமிக்கப்படுவர்.

3.7 நியமனதாரர்கள் 18/ 2020 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கைக்கும் அதற்கு இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கும் ஏற்புடையவாறு உரிய மட்டத்தில் அரச கருமமொழி தேர்ச்சியையும் பெறல் வேண்டும்.

4. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்**.-

இந்தப் பதவிகளுக்காக 03/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கு அமைவாக ஒருங்கிணைந்த மாதாந்த சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :

SL-01- 2016 - ரூபா 47,615 -1,335 × 10-1630 × 8-2,170 × 17- ரூபா 110,895.00

நியமனதாரர்கள் இலங்கை விவசாய சேவையின் III ஆந் தரத்தின் ஆரம்ப சம்பள படிநிலை ரூபா 47,615.00 இல் அமர்த்தப்படுவர்.

5. **தகைமைகள் :**

5.1 ***கல்வித் தகைமைகள்*** :

5.1.1 விவசாய அபிவிருத்தித் துறை மற்றும் விவசாய பொருளியல் துறைக்காக :
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படுகின்ற விவசாயம் தொடர்பான நான்கு ஆண்டு கால பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்.

5.1.2 விவசாய ஆராய்ச்சி துறைக்காக :
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படுகின்ற விவசாயம் தொடர்பான நான்கு ஆண்டு கால பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து தாவரவியல், இரசாயனவியல் அல்லது விலங்கியல் தொடர்பான நான்கு ஆண்டு கால பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்.

5.2 ***உடற் தகுதி*** .- ஒவ்வொரு பரீட்சார்த்திகளும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றக் கூடியவாறான உடற் தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

5.3 ***வேறு தகைமைகள்***.-

(அ) அனைத்து விண்ணப்பதார்களும் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்;

(ஆ) விண்ணப்பப்படிவத்தை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதுக்குக் குறையாமலும், 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். இதற்கமைவாக விண்ணப்பதாரரின் பிறந்த திகதி 2000.01.10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னராக மற்றும் 1992.01.10 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னராக இருந்தால் மாத்திரமே வயது தொடர்பான தகைமையைப் பூர்த்தி செய்தவராவார்.

(இ) விண்ணப்பதாரர் ஒருவருக்கு ஆகக் கூடுதலாக மூன்று தடவைகள் மாத்திரமே திறந்த போட்டிப் பரீட்சைக்கு தோற்ற முடியும்.

(ஈ) ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இலங்கையின் எப் பகுதியிலும் சேவையாற்றக் கூடியவாறு உடற் தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும் எனவும் அது தொடர்பில் மருத்துவ பரிசோதனை அறிக்கையின் மூலம் உறுதிப்படுத்தலும் வேண்டும்.

(உ) விண்ணப்பதாரர்கள் நல்லொழுக்கமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(ஊ) விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தன்று அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். (திறந்த ஆட்சேர்ப்புக்காக விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரர்கள் பரீட்சைக்காக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் அடிப்படைக் கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள பட்டப் படிப்பு தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும். இதற்காக பட்டச் சான்றிதழின் செல்லுபடியாகும் திகதி, விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னரான திகதியாக இருத்தல் வேண்டும். (பரிந்துரைக்கப்பட்ட தகைமைகளை பூர்த்தி செய்து கொள்ளுவதற்கு பெறுபேற்றை எதிர்பார்த்து சமர்ப்பிக்கின்ற விண்ணப்பப்படிவங்கள் செல்லுபடியாகாது.)

6. **பரீட்சைக் கட்டணம்** : பரீட்சைக் கட்டணம் ரூபா 1,200.00 ஆகும். பரீட்சைக் கட்டணம் செலுத்தும்போது இணையவழி முறைமையின் ஊடாக வழங்கப்படுகின்ற பின்வரும் கட்டணம் செலுத்தும் முறையின்கீழ் மாத்திரமே செலுத்தப்படல் வேண்டும்.

(i) எந்தவொரு வங்கிக் கடன் அட்டை ஊடாகவும் (Any Bank Credit Card)
(ii) எந்தவொரு வங்கிப் பற்று அட்டை ஊடாகவும் (Any Bank Debit Card)
(iii) இலங்கை வங்கி ஒன்லைன் பேங்கிங் முறை ஊடாகவும் (Bank of Ceylon Online Banking Method)
(iv) இலங்கை வங்கி கிளை ஊடாகவும் (Bank of Ceylon Slip Payment)
(v) அஞ்சல் திணைக்களத்தின் எந்தவொரு அஞ்சல் அலுவலகத்தின் ஊடாகவும் (Postal Department Payment at any Post Office)

கொடுப்பனவு கிடைக்கப்பெற்றமை பற்றி குறுந் தகவல் மூலமாக அல்லது மின்னஞ்சல் மூலமாக அறிவிக்கப் படும். பரீட்சைக் கட்டணத்துக்கான முழுமையான தொகையும் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் பரீட்சைக் கட்டணத்தை குறைத்து அல்லது அதிகரித்து செலுத்தியுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிட்ட ஏதேனும் முறையின் ஊடாக பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும் போது ஏற்படுகின்ற தவறுகளை இலங்கை பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்காது.

**குறிப்பு**.- மேலே குறிப்பிட்ட முறையின் ஊடாக கொடுப்பனவுகளைச் செலுத்துவது பற்றிய அறிவுறுத்தல் வெப் தளத்தின் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப அறிவுறுத்தலின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

7. **பரீட்சைக்கு விண்ணப்பித்தல் தொடர்பிலான அறிவுறுத்தல்கள்**.-

7.1 இணையவழி (Online) பரீட்சை விண்ணப்பப்படிவங்கள் ஆங்கில மொழிமூலம் மாத்திரமே பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பதாரர் இணையவழி மூலம் அனுப்பிய மென் பிரதி மற்றும் பதிவுத்தபாலில் அனுப்பிய அச்சுப் பிரதி (Printout) ஆகிய இரண்டு பிரதிகளும் பரீட்சைத் திணைக்களத்துக்குக் கிடைத்ததன் பின்னர் குறித்த மென் பிரதியும் அச்சுப் பிரதியும் சரிபார்க்கப்படும் (Verify) எனவும் செல்லுபடியாகும் விண்ணப்பப்படிவம் என பரீட்சைத் திணைக்களத்தினால், ஏற்றுக்கொள்ளப்பட்டது/ஏற்றுக்கொள்ளப்படவில்லை என முறைமைக்குள் பிரவேசிப்பதற்குப் பயன்படுத்தி கையடக்கத் தொலைபேசிக்கு குறுந் தகவல் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் (E mail) முகவரி மூலம் அறிவிக்கப்படும். இணையவழி விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்கான பொது அறிவுறுத்தல்களை (Common Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது இந்த அறிவுறுத்தல்களை கண்டிப்பாக கடைபிடிக்கவும். விண்ணப்பப் படிவத்தின் அச்சுப் பிரதி கிடைத்ததன் பின்னர், அதில் மேற்கொள்கின்ற திருத்தங்கள் செல்லுபடியான திருத்தங்கள் எனக் கருதப்பட மாட்டாது. பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறிவிக்காமலேயே நிராகரிக்கப்படும்.

7.2 விண்ணப்பப்படிவத்திலும், பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் உள்ள பரீட்சார்த்தியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும். அரச / மாகாண அரச சேவையின் அல்லது அரச கூட்டுத்தாபனத்தில் சேவையாற்றுகின்ற விண்ணப்பதாரர் ஒருவர் தமது கையொப்பத்தை திணைக்களத் தலைவர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினாலும், அவ்வாறு இல்லாத விண்ணப்பதாரர்கள் தமது கையொப்பத்தை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், பிரிவின் கிராம உத்தியோகத்தர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் ஆணை பெற்ற உத்தியோகத்தர், அரசாங்க சேவையின் அல்லது நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது பௌத்த விகாரையின் விகாராதிபதி அல்லது ததலைமை மதகுரு அல்லது பிற மதத்தின் புன்னிய இடத்துக்குப் பொறுப்பாக உள்ள மதகுருமார்களில் குறிப்பிடத்தக்க நிலையில் உள்ள ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

8. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.-

8.1 அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்கு உட்பட்டு, விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்துக்கு அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் உரிய கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை நிலையத்தின் மேற்பார்வையாளருக்கு தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார். விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன் அதுபற்றி குறிப்பிட்டு பத்திரிகை மூலம் அறிவித்தலொன்று பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் அறிவித்தல் வெளியிடப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்கள் கடந்ததன் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காது இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். நீங்கள் வைத்திருந்த விண்ணப்பப் படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் பிரதி, மற்றும் விண்ணப்பப்படிவத்தை அஞ்சல் செய்தபோது பதிவுசெய்த பற்றுச்சீட்டு ஆகியவற்றுடன் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியைக் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திடம் வினவுமாறு தெரிவிப்பதுடன் கொழும்புக்கு வெளியே உள்ள விண்ணப்பதாரர் எனின் பெக்ஸ் மூலம் அனுமதி அட்டையின் பிரதி ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு உங்களது பெக்ஸ் இலக்கத்துடன் மேலே குறிப்பிட்ட விபரங்கள் அடங்கிய கோரிக்கைக் கடிதமொன்றை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு பெக்ஸ் மூலம் அனுப்பி வினவுவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

8.2 பரீட்சார்த்தி ஒருவர் தமக்குரிய பரீட்சை நிலையத்தில் தமக்குரிய பரீட்சைக்கு தோற்ற வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் உரிய பரீட்சை நிலையத்துக்கான கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை முதலில் குறித்த மண்டபத்தில் தோற்றுகின்ற தினம் குறித்த பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். தமக்கு தோற்றுவதற்கு உரித்துள்ள பரீட்சையின் குறித்த வினாத்தாளுக்கு விடையளிப்பது ஒவ்வொரு பரீட்சார்த்தியின் பொறுப்பாகும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் கடைபிடிக்க வேண்டிய ஒழுங்கு விதிகள் இந்த வர்த்தமானப்

பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கின்ற ஒழுங்கு விதிகளுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்படல் வேண்டும். அவ்வாறான ஒழுங்குவிதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கின்ற தண்டனைக்கு ஆளாகுதல் வேண்டும்.

8.3 பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டையை வழங்குவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமையைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொள்வதாகக் கருதுதல் கூடாது.

9. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்.**- தான் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடம் தொடர்டபிலும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறும் வண்ணம் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்காக கீழே காட்டப்பட்டுள்ள ஏதும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும்.

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலும் பரீட்சார்த்தியின் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடியவாறு முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மறைக்காதவாறு பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்துக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்ததிலிருந்து பரீட்சை முடிந்து வெளியேறும் வரை பரீட்சை மேற்பார்வை அலுவலர்கள் விண்ணப்பதாரர்களை அடையாளம் காணக்கூடியவாறு முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மறைக்காதவாறு இருத்தல் வேண்டும்.

10. **பரீட்சை முறை :**

10.1 **பரீட்சை மொழி மூலம்.**- பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கின்ற மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

10.2 பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுகின்ற அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரு மொழியில் மாத்திரமே விடையளிக்க முடியும்.

11. **போட்டிப் பரீட்சை நடைமுறை மற்றும் பாட விதானம்.**- அனைத்து விண்ணப்பதாரர்களும் இதனகத்துப் பின்னர் காட்டப்படுகின்ற பாட விதானத்துக்கு ஏற்ப 1 ஆவது மற்றும் 2 ஆவது வினாத்தாள்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

ஒவ்வொரு பதவிக்கும் உரிய பாட விதானங்கள் முதலாவது பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ளது.

12. **பெறுபேறுகளை வெளியிடுதல்.**- வெற்றிட எண்ணிக்கையைப் போன்று இரண்டு மடங்குக்கு மேற்படாத எண்ணிக்கையைக் கொண்ட தகுதி பெற்ற பரீட்சார்த்திகளின் பெயர்கள் அடங்கிய பெறுபேற்றுப் பட்டியல், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு வழங்கப்படும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்டவாறு அனுப்பி வைக்கப்படும் அல்லது www.results.exams.gov.lk என்னும் இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

13. விண்ணப்பப்படிவத்துடன் சான்றிதழ்கள் எதனையும் இணைத்து அனுப்புதல் கூடாது. விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சைக்கு தோற்றும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் அவர்கள் தங்களது விண்ணப்பப்படிவங்களில் குறிப்பிட்டுள்ள தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பிப்பதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

14. **போலியான தகவல்களை வழங்குதல்.**- பரீட்சார்த்தியொருவர் இந்தப் போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் காலப்பகுதியில் அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பப்படிவத்தை நிராகரிப்பதற்கு இடமுண்டு. பரீட்சார்த்தி சமர்ப்பித்துள்ள ஏதும் விடயம் போலியானது என அல்லது ஏதும் முக்கியமான விடயமொன்றை வேண்டுமென்றே மறைத்துள்ளார் என நியமனம் வழங்கப்பட்ட பின்னர் தெரியவரும் பட்சத்தில் அது அவரை அரசாங்க சேவையிலிருந்து நீக்குவதற்கு காரணமாக அமையலாம்.

15. இதில் ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதும் விடயங்கள் காணப்படின் அத தொடர்பிலான இறுதித் தீர்மான நியமன அதிகாரபீடத்தினால் எடுக்கப்படும்.

16. நிலவுகின்ற வெற்றிடங்கள் அனைத்தையும் அல்லது அதன் ஒரு பகுதியை நிரப்புவது தொடர்பிலான இறுதித் தீர்மானம் நியமன அதிகாரபீடத்தினாலேயே எடுக்கப்படும்.

17. சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்ற இந்த அறிவித்தலில் மொழிகளுக்கிடையே ஏதும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழி அறிவித்தல் சரியெனக் கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
விவசாய அமைச்சு.

ரஜமல்வத்த ஒழுங்கை,
பத்தரமுல்ல,
2021.11.30.

**முதலாவது பின்னிணைப்பு**

**திறந்த போட்டிப் பரீட்சை தொடர்பான ஒழுங்கு விதிகளும், பாட விதானமும்**

**1 ஆம் வினாத்தாள் - நுண்ணறிவு**

இது மொழி, கணிதம் மற்றும் தர்க்கிக்கும் ஆற்றல்களைப் பரிசீலித்துப் பார்ப்பதற்கான வினாக்கள் அடங்கிய ஒரு பல்தேர்வு வினாத்தாள்/குறுகிய வினாத்தாள் ஆகும். காலம் 1¼ மணித்தியாலம். மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

**2 ஆவது வினாத்தாள் - விடய ஆய்வு**

இது குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறை பற்றிய அறிவைப் பரிசீலிப்பதற்காக நடத்தப்படும் பதவிக்கான ஒரு எழுத்து மூல உளச்சார்புப் பரீட்சையாகும். ஒவ்வொரு விண்ணப்பதாரரினாலும் தான் விண்ணப்பிக்கின்ற பதவிக்கு அல்லது பதவிகளுக்குப் பொருத்தமான விதத்தில் அவர்கள் கீழ்க்காணும் வினாத்தாள்களில் தேர்ந்தெடுக்கப்படும் வினாத்தாள்களுக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள். இந்த வினாத்தாள் குறுகிய வினாக்களையும் பல்தேர்வு வினாக்களையும் உள்ளடக்கியிருக்கும். நேரம் 2 மணித்தியாலங்கள் மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

**குறிப்பு**:- கீழ்க்காணும் பாடவிதானத்துக்கு அமைய மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை வினாத்தாள் விடய ஆய்வுக்கு கூடிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுத் தயாரிக்கப்படும். பரீட்சை ஆணையாளரினால் தீர்மானிக்கப்படும் விதத்திற்கு அமைய பரீட்சை நடாத்தப்படும்.

ஒவ்வொரு பதவிக்குரிய பாடவிதானங்கள் பின்வருமாறு காணப்படும்.

I. **விவசாய ஆராய்ச்சித் துறைக்கான வினாத்தாள் :**

விண்ணப்பதாரர்களினது விருப்பத்தின் பேரில் கீழ்க்காணும் (அ), (ஆ) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள 02 பகுதிகளில் ஒரு பகுதிக்கு மாத்திரம் விடையளிக்கப்படுதல் வேண்டும் :

**(அ) பகுதி**

01. **விவசாயத் தாவரவியல்**.- தாவர வகுதிகள் பற்றிய கோட்பாடுகள், தாவரங்களின் வளர்ச்சி மற்றும் பௌதீகவியல் கோட்பாடுகள்.

02. **பாரம்பரிய தாவர இனப்பெருக்கம்**.- மெண்டலின் கோட்பாடு, பாரம்பரிய இனப்பெருக்கம், பாரம்பரிய அணு மாற்றம், இளையங்கள் வளர்ப்பு, கணிய மரபியல், தாவர இனப்பெருக்கக் கோட்பாடுகள், மரபணு வளங்கள் பாதுகாப்பு, உயிர் பல்வகைத் தன்மை, மகரந்தச் சேர்க்கை இனப்பெருக்கக் கோட்பாடுகள், விகாரமடைதல், கலப்பின மற்றும் கலப்பினமற்ற தாவரங்கள், பரந்தளவில் பயன்படுத்தப்படுகின்ற தாவர இனப்பெருக்க முறைகள் மற்றும் தற்போதைய போக்குகள்.

03. **தாவர நோயியல்**.- நோய்க் கிருமிகளின் வகை, தொற்றுகின்ற விதம், இவற்றைக் கட்டுப்படுத்தும் கோட்பாடுகள், தாவர நோயியலும் நோய்க் கட்டுப்பாடும் பற்றிய தற்போதைய போக்குகள், நோயைக் கண்டறியும் நுட்பங்கள்,

நோய் பண்பியல்பு, கொக்கிக் கருதுகோள் பிரயோகம், நோய் கண்டறியும் நவீன நுட்பங்கள் (ELISA) மற்றும் தற்போதைய போக்குகள்.

04. **பூச்சியியல் அடிப்படைக் கோட்பாடு**.- விலங்கியல் பாகுபாட்டுக் கோட்பாடுகள், கிருமி வகைகளின் இயல்பு, வாழ்க்கை வட்டத் தகவல்கள், பாதிப்புகள், பூச்சி அழிவின் பொருளாதார முக்கியத்துவம் பூச்சிகளின் குடித்தொகை அழிவு பற்றிய மதிப்பீடு.

05. **விதைத் தொழில்நுட்பம்**.- விதைப் பௌதிகவியல், விதைக் கட்டமைப்பு, செயலற்று முளைத்தல், உயிர் வாழ்தல், நம்பகத்தன்மையும் தூய்மை பற்றிய சோதனையும், விதை உற்பத்திக் கட்டங்கள், விதைகளைச் சான்றுப்படுத்துதல், விதைகளைக் களஞ்சியப்படுத்தல்.

06. **இழைய வளர்ப்பு**.- கோட்பாடுகள், இழைய வளர்ப்பு வசதிகளும், தேவைகளும், மூலங்கள், இழைய வளர்ப்பு முறைகளின் பிரயோகங்கள், முதலுரு தாவர வளர்ப்பு முறை, விகாரமடைந்து புதிதாகத் தோன்றுதல், கரு மீட்பு. செயற்கைக் கருத்தரிப்பு, மரபணுப் பரிமாணங்கள், ப்ராக் பாதுகாப்பு.

07. **விவசாய இரசாயனவியல்**.- உயிர் இரசாயனவியல் கோட்பாடுகள், விவசாயத்தில் உயிர் இரசாயனவியலின் செயல்முறைப் பிரயோகங்கள், உணவு இரசாயனவியல் பற்றிய கோட்பாடுகள், விவசாய உணவு இரசாயனவியலின் செயல்முறைப் பிரயோகங்கள், பகுப்பாய்வு ரீதியான இரசாயனவியல் பற்றிய கோட்பாடுகள், விவசாயத்தில் காணப்படும் செயல்முறைப் பிரயோகங்கள்.

அல்லது

**(ஆ) பகுதி**

01. **விவசாயத் தாவரவியல்**.- விவசாயக் காலநிலையியல், சுற்றாடல், நில அபிவிருத்தி, நிலப் பண்படுத்தல், பயிர் வளர்ச்சியும் பௌதீகவியலும் பற்றிய கோட்பாடுகள், பயிர் வளர்ச்சி அளவீடு, அறுவடைச் சுட்டிகள், பசளையின் சிபாரிசும் வினைத்திறனும், களை உயிரியலும் கட்டுப்பாடும், நீர்ப்பாசன முறைகள் பற்றிய கோட்பாடுகள், பயிர்ச்செய்கை, மண் மற்றும் நீர் தொடர்புகள் பற்றிய கோட்பாடுகள்.

02. **பயிர் விஞ்ஞானம்**.- நெல், மேட்டு நிலத் தானியப் பயிர்கள், பயிரினங்கள், கிழங்குப் பயிர்கள், மற்றும் ஏனைய வயல் பயிர்கள் என்பவற்றின் பௌதீகவியல், பரவல் முறைகள், தாவர நடுகை முறைகள், பயிர்கள் பராமரிப்பு பௌதீகவியல் இரசாயன உயிரியல் முறை, விஞ்ஞான ரீதியில் செயற்கைப் புல் நிலங்களை அமைத்தல், அவற்றைப் பராமரித்தல், மர உற்பத்திகளும் பழ உற்பத்திகளும் பற்றிய கோட்பாடுகள்.

03. **மண்ணியல்**.- மண் உருவாக்கம், மண்ணின் பௌதீக மற்றும் இரசாயனப் பண்புகள், பயிர்கள் சம்பந்தமான மண்ணிலுள்ள பிரச்சினைகள், மண் வளப் பராமரிப்பு, நடுகைக் கன்றுகள், போசணை நடுகைக் கன்றுகள் வகைப்படுத்தல் பற்றிய கோட்பாடுகள்.

04. **பாரம்பரிய தாவர இனப்பெருக்கம்**.- மென்டலின் கோட்பாடு, பாரம்பரிய இனப்பெருக்கம், விகாரங்கள், மூலக்கூறு மரபியல், தாவர இனப்பெருக்கக் கோட்பாடு, தாவர வளங்கள் பாதுகாப்பு மற்றும் உயிர் பல்வகைமை.

05. **தாவர நோயியல்**.- தாவர நோய்கள், நடுகைக் கன்றுகள் நோய்த் தொற்றுக்களுக்கு ஈடுகொடுக்கும் விதம், உயிரியல் கட்டுப்பாடு, நோய்க் கட்டுபாட்டு நவீனப் போக்குகள்.

06. **பூச்சியியல் அடிப்படைக் கோட்பாடுகள்**.-(அ) வினாத்தாளின் 04 ஆம் உபபந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

07. **கள ஆராய்ச்சிக் கோட்பாடுகள், புள்ளிவிபரவியல் கோட்பாடுகள்**.- (Statistical Principles), இலங்கையின் விவசாயத் துறையினது முக்கியமான புள்ளி விபரங்கள் பட்டியல் பற்றிய அறிவு.

08. **பூச்சியியல்**.- விவசாயத்தில் காணப்படுகின்ற பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பூச்சிகள், அவற்றின் வகுதிகள், உள்ளக மற்றும் வெளியகப் பண்புகள், பல முறைமைகளின் கட்டமைப்பும் மற்றும் அவற்றின் தொழிற்பாடுகளும், பூச்சிகள் கட்டுப்பாடு பூச்சிகளின் அழிவு முக்கியத்துவம், கிருமிகளை இனங்காணுதல் அவற்றின் பாதிப்புகளும் கட்டுப்பாடுகளும், ஒன்றிணைந்த பூச்சிக் கட்டுப்பாடு.

09. **நுண்ணுயிரியல்**.- நுண்ணங்கிகள் மற்றும் விவசாயம் சார்ந்த சுற்றாடல், உயிரியல் தொழில்நுட்ப விவசாயத்துக்கான பிரயோகம். மண்ணிலுள்ள நுண்ணங்கிகளும் விவசாயத்தின் மீது அவற்றின் தாக்கங்களும்.

10. **உயிரினப் புள்ளிவிபரவியலும், பிரயோகப் புள்ளிவிபரங்களும்**.- புள்ளிவிபரவியல் சம்பந்தமான அடிப்படை அறிவு, விவசாய ஆராய்ச்சித் திட்டப் பகுப்பாய்வு, தரவுகளைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் பகுப்பாய்வுகள்.

**குறிப்பு**.- மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் ஊடாக உதவி விவசாயப் பணிப்பாளர் (விவசாய ஆராய்ச்சி) பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் சகல பரீட்சார்த்திகளும் மேற்குறித்த (அ) அல்லது (ஆ) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள 02 பகுதிகளில் ஏதாவது ஒரு பகுதிக்கு மாத்திரம் விடையளிப்பது அவசியமாகும்.

### II. விவசாய அபிவிருத்தித் துறைக்கான வினாத்தாள்

01. **பொது விவசாயம்**.- இலங்கையின் காலநிலை வலயங்கள், காணிகள் அபிவிருத்தி, நிலத்தைப் பண்படுத்துதல் மற்றும் உபகரணங்கள், பயிர்கள் தாபிப்பு அதற்குத் தேவையான இயந்திர உபகரணங்கள், மண்ணும், மண் வளமும், நாற்று மேடைகளும், நாற்று மேடைப் பராமரிப்பும், தாவர மூலப்பொருட்கள், பூச்சிகள் கட்டுப்பாடு, தாவர நடுகைக் கன்றுகள் பாதுகாப்பு உபகரணங்கள், பயிர்ச் செய்கை முறை, நீர்ப்பாசன முறை, ஒன்றிணைந்த விவசாயம், பாதுகாப்பு விவசாயம், நுண் நீர்ப்பாசன முறை, அறுவடையும் அறுவடை உபகரணங்களும், அறுவடைக்குப் பின்னர் நிகழும் இழப்புகள், பண்ணை சார்ந்த உற்பத்திகள் தயாரிப்பு, விசேட பிரதேசங்களில் பயிரிடுவதற்குப் பொருத்தமான மரக்கறிப் பயிர்கள், பழப் பயிர்கள், உலர் வலயப் பயிர்கள் மற்றும் தானியத்தைத் தேர்ந்தெடுக்கும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள், ஒன்றிணைந்த பூச்சிக்கட்டுப்பாடு, ஒன்றிணைந்த தாவர நடுகைக் கன்றுகள் முறைமை, தாவரப் பாதுகாப்பு பற்றிய சட்டங்கள், மண் பாதுகாப்பு பற்றிய சட்டங்கள்.

02. **பயிர் உற்பத்தி**.- தாவரவியல், விவசாயக் காலநிலை மற்றும் சுற்றாடல், நில அபிவிருத்தி மற்றும் பண்படுத்தல், பயிர்களின் வளர்ச்சிக் கோட்பாடு மற்றும் நடுகைக் கன்றுகளின் பௌதிகவியல், பயிர்களின் வளர்ச்சியை அளவிடுதல், அறுவடைச் சுட்டிகள், பசளைகளின் சிபாரிசு, பசளைகளின் வினைத்திறன், களைத் தாவரங்களின் உயிரியல் கட்டுப்பாடு, நீர்ப்பாசனம், விவசாயவியல், பயிர்கள் மற்றும் நீர் என்பனவற்றுக்கு இடையிலுள்ள தொடர்புகள் பற்றிய கோட்பாடுகள்.

03. **களப் பயிர்கள்**.- அறிமுகம், சுற்றாடல் தேவைப்பாடுகள், தாவர வகுதிகள் மற்றும் இனங்கள், நடுகைக்கன்று வளர்ச்சி, பௌதிகவியல், விளைச்சலை நிர்ணயிக்கும் பௌதிக விஞ்ஞானக் கோட்பாடுகள், நெற்பயிரின் விவசாயவியல், பயிர் பராமரிப்பு மற்றும் உற்பத்திகள், மேட்டுநிலத் தானியங்கள், பயிரினங்கள், கிழங்குப் பயிர்கள் மற்றும் ஏனைய முக்கியமான களப் பயிர்கள். (புகையிலை, வெங்காயம், நார் தாவரங்கள் மற்றும் எண்ணெய் தரும் பயிர்கள்).

04. **பயிர்கள் பராமரிப்பு**.- இடைப்பயிர்ச் செய்கை, அறுவடை மற்றும், பதனிடல்.

05. **தோட்டப் பயிர்கள் உற்பத்தி**.- பழங்கள் உற்பத்தி, போசணை பெறுமானம், சமூகப் பொருளாதாரக் காரணிகள், ஆரம்பம் மற்றும் பரிமாணம், சுற்றாடல் தேவைப்பாடுகள், பயிர்ச்செய்கை முறை, நவீன தொழில்நுட்ப முறைகளின் பாவனை.

06. **பழ வர்க்கங்கள், மரக்கறி வகைகள் மற்றும் பூக்கள் உற்பத்தி**.- நாற்றுமேடைப் பராமரிப்பு, தோட்டப் பயிர்கள் பராமரிப்பு, பயிர்கள் மைய புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் பயிர்ச்செய்கை முறைகள், பழப் பயிர்களினதும் மரக்கறிப் பயிர்களினதும் பயிர்ச் செய்கை மேம்பாடு, பழ வர்க்கங்களையும் மற்றும் மரக்கறி வகைகளையும் அடிப்படையாகக் கொண்ட பயிர்ச்செய்கை முறைகள், அறுவடைக்குப் பின்னர் நிகழும் இழப்புகள், பழ வர்க்கங்களினதும் மற்றும் மரக்கறி வகைகளினதும் அறுவடைக்குப் பின்னர் நிகழும் இழப்புகளைத் தவிர்த்துக் கொள்ளுதல், பல்லுயிரினத் தொழில்நுட்பம், பழ வர்க்கங்களுக்கும், மரக்கறி வகைகளுக்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் நிலவும் சந்தை வாய்ப்புகள், நவீன வரையறைகள் மற்றும் எதிர்காலத் தந்திரோபாயங்கள், மரக்கறி உற்பத்திக்கான தேவைகள், மரக்கறி வகைகளை அடிப்படையாகக் கொண்ட பயிர்ச் செய்கை முறைகள், சந்தைப்படுத்தல், பூ உற்பத்தி சார்ந்த கைத்தொழில்கள், விளம்பரத் தொழில்நுட்பம், பயிர்ச் செய்கை முறைகள், உன்னத நியமங்கள், நில அழகுபடுத்தல் பற்றிய கோட்பாடுகள்.

07. **விவசாய விஸ்தரிப்பும் பயிற்சியும்**.- விவசாய விஸ்தரிப்பு பற்றிய வரைவிலக்கணம் அவற்றின் குறிக்கோள்கள், விவசாய கைத்தொழில் அபிவிருத்தி விவசாய விஸ்தரிப்பு, கண்டுபிடிப்புகளைப் பின்பற்றுதல் மற்றும் பரப்புதல், தொடர்பாடல், விஸ்தரிப்பு பற்றி போதிக்கும் முறைகள், இலங்கையில் பயன்படும் விஸ்தரிப்பு அணுகுமுறைகள்,

*ஆராய்ச்சி விஸ்தரிப்பு சம்பந்தமான தொடர்புகள், விஸ்தரிப்பு சார்ந்த நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடல், மீளாய்வு மற்றும் மதிப்பீடு, இலங்கையின் விவசாய விஸ்தரிப்பு மற்றும் அதனுடன் சம்பந்தப்படும் நிறுவனங்கள், முதியோர் கல்வி, பயிற்சிசார் நடைமுறைகள், பயிற்சி சார்ந்த தேவைப்பாடுகளைக் கண்டறிந்து கொள்ளும் பொருட்டு பயன்படும் பல வழிமுறைகள், பாடத்திட்டங்களைத் தயாரித்தல், பயிற்சிகள் பற்றிய மதிப்பீடு, பயிற்சிகளுக்கான கற்புல செவிப்புல சாதனங்கள் பயன்பாடு.*

*08.* ***விதைத் தொழில்நுட்பம்.*** *- விதைகளின் பௌதீகவியல், விதைக் கட்டமைப்பு, விதையின் உருவமைப்புகள், விதை முளைத்தல், விதை முளைதிறன், விதைகள் பரிசோதனை, விதைகள் முளை திறன் மற்றும் விதைத் தூய்மை பற்றிய பரிசோதனை, விதை உற்பத்திக் கட்டங்கள், விதைகள் சான்றுபடுத்தல், விதைகள் களஞ்சியப்படுத்தல்.*

*09.* ***தேனீ வளர்ப்பு.*** *- ஒரு தேன் கூட்டிலுள்ள தேனீக்களின் வகை மற்றும் தேன் வதைகள், தேனீ வளர்ப்புப் பெட்டிகளின் பாகங்கள், தேனீக்களைப் பிடித்து நிலைப்படுத்தல், கூண்டினுள் அடைத்து வளர்த்தல், வகைப்படுத்தல், ஒரு தேன் கூட்டிலுள்ள கிருமிகள் மற்றும் நோய்கள்.*

## III. விவசாயப் பொருளியல் துறைக்கான வினாத்தாள்

*01.* ***விவசாய உற்பத்திகள் பொருளியல் மற்றும் பண்ணைகள் பராமரிப்பு.*** *- விவசாய உற்பத்திப் பண்ணைகள் பராமரிப்பிலுள்ள முக்கியத்துவம், அடிப்படை எண்ணக்கரு, உற்பத்தித் தொழிற்பாடுகள், உற்பத்தித் தொழிற்பாடுகள் அமைப்பு, உற்பத்திப் பரப்புகள், ஏனைய ISO, ISO உயிர்ச்சாய்வு, ISO வருமான வழிகள், வளங்கள் இணைப்பு மற்றும் செலவுகளைக் குறைத்தல் பற்றிய கோட்பாடுகள், பிரதியீடு மற்றும் வருமான விளைவுகள். விவசாயத்திலுள்ள ஆபத்து மற்றும் நிச்சயமற்ற தன்மைகள் என்பவற்றுக்கு முகங்கொடுப்பதற்கான உற்பத்தித் தயாரிப்பு நெகிழ்வு மற்றும் பல்லுயிரினத் தன்மை, விவசாயப் பொருட்களுக்கான விசேட விலையை நிர்ணயிக்கும் தத்துவம், தாவரங்கள் மற்றும் விலங்குகள் என்பவற்றின் இணைந்த கூறுகள் பற்றிய மதிப்பீடு, பண்ணை ஸ்தலங்கள் மற்றும் அளவு பயன், கூட்டுப் பண்ணைகளின் முக்கியத்துவம் மற்றும் ஒத்தீட்டு நன்மைகள் பற்றிய கோட்பாடுகள், பண்ணைகளின் பொறிமுறை சார்ந்த சக்தி மற்றும் பலவீனங்கள் முதலிய விடயங்களை நிர்ணயிக்கும் அறிக்கைகளிலுள்ள முக்கியத்துவம் மற்றும் அனுகூலப்படுத்தும் மாதிரிகளில் இந்தத் தகவல்களை உள்ளடக்குதல்.*

*02.* ***விவசாய சந்தைப்படுத்தல்.*** *- சந்தைப்படுத்தல் கோட்பாடுகள் மற்றும் உற்பத்தியினதும், சந்தைப்படுத்தலினதும் ஒத்தீட்டு ரீதியான முக்கியத்துவம், இலங்கையில் சந்தைப்படுத்தல் விடயத்துடன் சம்பந்தப்படும் நிறுவனங்கள், சந்தைப்படுத்தல் வழிமுறைகளின் வளர்ச்சியின் விளைவுகளை ஏற்படுத்துவதில் அத்தகைய நிறுவனங்களின் பங்களிப்புகள், இலங்கையின் விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் எதிர்நோக்குவதற்கு நேரிடுகின்ற பிரச்சினைகள் மற்றும் சந்தைப்படுத்தல் வினைத்திறன் மேம்பாடு பற்றிய கோட்பாடுகள்.*

*03.* ***காணிப் பொருளியல்.*** *- பொருளாதார விஞ்ஞான எண்ணக்கருக்கள், நிலப் பாவனையில் செல்வாக்குச் செலுத்தும் விதங்கள், இலங்கையில் காணிகளுக்கான கேள்வி மற்றும் நிரம்பல், காணிகள் பரிசீலனை விடயங்கள் இலங்கையில் திட்டமிடப்படும் விதங்கள், இலங்கையில் விவசாயக் குடியேற்றங்களைத் தாபித்தல் மற்றும் மக்களைக் குடியேற்றுதல் சம்பந்தமான நிகழ்ச்சித் திட்டங்களின் முக்கியத்துவம்.*

*12-344*

---

## தொழில் அமைச்சு

### தொழில் திணைக்களத்தின் தொழில் அலுவலர் II பதவிக்கு ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021

*தொழில் அமைச்சின் கீழுள்ள தொழில் திணைக்களத்தின் தொழில் அலுவலர் - II பதவிக்காக ஏற்பட்டுள்ள 59 வெற்றிடங்களுக்கு அரசசேவைகள் ஆணைக்குழுவின் அனுமதியுடனான ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு, விண்ணப்பங்கோரும் இறுதித்தினத்தன்று அதாவது 2022.01.20 ஆந் திகதியன்று இவ்வறிவித்தலின் 02 ஆம் மற்றும் 03 ஆம் பந்திகளின் பிரகாரம் தரப்பட்டுள்ள தகுதிகளை முழுமையாகக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கல்வித் திணைக்கள இணையத்தளமான www.doenets.lk இல் விண்ணப்பப்படிவம் பிரசுரிக்கப்பட்டுள்ளது என்பதுடன் விண்ணப்பப்படிவங்களை இணையத்தளத்தினூடாக மட்டுமே சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பப்படிவம் இவ் இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்யப்படல் வேண்டும் என்பதுடன் உரிய பகுதிகள்*

பூரணப்படுத்தப்பட்டு விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டு தொழில் ஆணையாளர் நாயகம், நிறுவன, பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளை, பரீட்சைத் திணைக்களம் த. பெ. இல. 1503, கொழும்பு என்ற முகவரிக்கு விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கொழும்பு நகரில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் மாத்திரம் 2022, ஏப்பிறல் மாதம் இப்பரீட்சை நடாத்தப்படும்.

**குறிப்பு 01.**- விண்ணப்பத்தின் அச்சுப்பிரதியானது தபாலில் அனுப்பவேண்டியது கட்டாயமானதாகும் என்பதுடன் காலதாமதமாகுதல் மற்றும் தொலைந்து போதல் தொடர்பில் கவனம் எடுக்கப்படமாட்டாது. விண்ணப்பத்தை கடைசி நாள் வரை தாமதப்படுத்துவதால் ஏற்படும் இழப்புகளை விண்ணப்பதாரர்களே பொறுப்பேற்க வேண்டும்.

01. **ஆட்சேர்க்கும் திட்டம்.**- எழுத்துப் பரீட்சையொன்றில் பெறப்படும் மறுமொழியின் திறமை ஒழுங்கு அடிப்படையின் பிரகாரம் மற்றும் தகைமைகளைப் பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சையொன்றின் பிரகாரமும் நியமனங்கள் வழங்கப்படும்.

02. **தகுதிகள்.**-

2.1 கல்வித் தகைமைகள் :

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ) உயர்நீதிமன்றில் சத்தியப்பிரமாணம் செய்துள்ள வழக்கறிஞராயிருத்தல்.

2.2 உடற்றகைமைகள்.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவை புரிவதற்கும் பதவிக்குரிய உத்தியோகபூர்வ கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உரிய உடல் ரீதியானதும் உளரீதியானதுமான தகைமைகளைக் கொண்டிருத்தல்.

2.3. ஏனைய தகைமைகள்.-

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல்.
(ii) மிகச்சிறந்த நற்பண்புகளைக் கொண்டிருத்தல்.
(iii) விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் தரப்பட்டுள்ள திகதியன்று பதவிக்குத் தேவையான எல்லாத் தகைமைகளையும் முழுமையாகப் பூர்த்தி செய்திருத்தல்.

03. **வயதெல்லை.**- விண்ணப்பிப்பதற்குரிய இறுதித் திகதியன்று 21 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்குக் கூடுதலாக இல்லாமலும் இருத்தல். (இதன் பிரகாரம் 2001.01.20 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1987.01.20 ஆந் திகதிக்குப் பின்னர் பிறந்த தினத்தைக் கொண்டுள்ளவர்களுக்கு மாத்திரம் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.)

04. சேவையில் சேர்த்துக் கொள்வதற்கான நியதிகளும், சேவை நிபந்தனைகளும் :

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கும் உரித்துடையதுமாகும்.

தொழில் திணைக்களத்தில் தொழில் அலுவலர் - II பதவிக்கு தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் எதிர்காலத்தில் ஓய்வூதியம் தொடர்பில் அரசாங்கத்தினால் எடுக்கப்படும் கொள்கை முடிபுகளுக்கு ஆளாவார்.

(ii) இந்நியமனம் 03 வருடங்களுக்கு தகுதிகாண் காலத்தைக் கொண்டிருக்கும்.
(iii) நியமனத் திகதியிலிருந்து 03 வருட காலத்தினுள் முதலாவது வினைத்திறமைகாண் தடையைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.
(iv) அரசமொழிக் கொள்கையின் பொருட்டு, இலக்கம் 18/2020, 2020/10/16 திகதியையுடைய அரச நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட ஏனைய சுற்றறிக்கைகளும் ஏற்புடையதாகும்.
(v) அரச சேவைக்கான நியமனங்களுக்குரிய பொதுவான நிபந்தனைகளுக்கு அமைவாகவும், அரச சேவைகள் ஆணைக்குழுவின் விதிகள், நிதிப்பிரமாணங்கள், தாபனக்கோவையின் ஏற்பாடுகள் மற்றும் அவற்றுக்குச் செய்யப்படும் திருத்தங்கள், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகள் ஆகியவற்றுக்கு அமைவாகவும் 2013.09.26 ஆந் திகதிய அரச சேவைகள் ஆணைக்குழுவால் அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு விதிகளில் கூறப்பட்டுள்ள

தரங்கள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றுக்கும் அவற்றுக்கு எதிர்காலத்தில் ஏற்படுத்தப்படும் திருத்தங்களுக்கும் அமைவாகவும் தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்தி தொழில் அலுவலர் தரம் II இற்கு நியமிக்கப்படுவார்.

(vi) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்தி தீவின் எப்பாகத்திலும் தேவைப்படும் பிரதேசத்தில் சேவை புரிய வேண்டும்.

(vii) தமக்கு வழங்கப்படும் பதவியில் உரிய திகதியன்று கடமையைப் பொறுப்பேற்கத் தவறும் மற்றும்/ அல்லது நியமிக்கப்பட்ட பதவிக்குரிய கடமைகளை உரிய பிரதேசத்தில் பொறுப்பேற்பதை நிராகரிக்கும் விண்ணப்பதாரியின் நியமனத்தை இரத்துச் செய்வதற்குரிய அதிகாரம் தொழில் ஆணையாளர் அதிபதிக்கு உண்டு.

05. **சம்பள அளவுத்திட்டம்.**- இப்பதவிக்கு ரூபா 34,605 - 10 × 660 - 11 × 755 - 15 × 930 - ரூபா 63,460.00 என்னும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் உரித்தானது. (2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் MN - 05 - 2016 சம்பளப் பிரிவு)

06. எழுத்துப் பரீட்சை.- எழுத்துப் பரீட்சையின் வினாத்தாள்கள் இரண்டில் சித்தியடைதல் வேண்டும்.

| வினாத்தாள் | காலம் | ஆகக்கூடிய புள்ளிகள் | சித்தி பெறுவதற்கான புள்ளி |
|---|---|---|---|
| 01. கட்டுரையும் சுருக்கமும் | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| 02. பொது உளச்சார்பு | 01 மணித்தியாலயம் | 100 | 40 |

விண்ணப்பதாரிகள் எல்லா வினாப்பத்திரங்களுக்கும் விடையளிக்க வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் 40% அல்லது அதற்கு அதிகமான புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் பொதுவானதொரு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவோரது எண்ணிக்கை. வெற்றிடங்கள் தொடர்பில் நியமிக்கப்படுவோரது எண்ணிக்கை மற்றும் நியமனம் வழங்கப்படும் திகதி ஆகியன தொழில் ஆணையாளர் அதிபதியால் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பதாரிகளில் பலர் ஒரே அளவான மொத்தப் புள்ளிகளைப் பெறும் சந்தர்ப்பத்தில், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக தொழில் ஆணையாளர் அதிபதியால் தீர்மானங்கள் எடுக்கப்படும் என்பதுடன், அத்தீர்மானங்கள் இறுதியானவையாக இருக்கும்.

07. எழுத்துப் பரீட்சைகளுக்கான பாடத்திட்டங்கள் பின்வருமாறு :

| வினாப் பத்திரத்தின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| 01. கட்டுரையும் சுருக்கமும் | இவ்வினாப்பத்திரம் உள்நாட்டு ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் இடம்பெறும் முக்கியமான அரசியல், பொருளாதார, சமூக விடயங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கும் |
| 02. பொது உளச்சார்பு | இது விண்ணப்பதாரியின் மொழி, கணிதம், தர்க்கரீதியான சிந்தனை, முடிவெடுக்கும் தன்மை ஆகிய இயலமைகளைப் பரீட்சிப்பதாக அமையும். |

08. **நேர்முகப் பரீட்சை.**- தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக மாத்திரம் பொதுவான நேர்முகப்பரீட்சையொன்று நடாத்தப்படும். நேர்முகப் பரீட்சைக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

**கவனிக்க வேண்டிய விடயம்.**- நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதானது நியமனம் பெறுவதற்குரிய தகுதியாகக் கருதப்படமாட்டாது.

09. **பரீட்சை நிபந்தனைகள்.**-

(i) பரீட்சைகள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பதாரி விரும்பிய ஏதாவது மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. அனைத்து வினாப்பத்திரங்களும் ஒரே மொழியிலேயே விடையளிக்கப்பட வேண்டும். விண்ணப்பதாரரின் விண்ணப்பப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது அனைத்துப் பரீட்சார்த்திகளும் இரண்டு வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

(ii) இணையளத்தள விண்ணப்பம் ஆங்கில மொழியில் மட்டுமே பூரணப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பத்தின் மென்பொருள் இணையத்தளத்தினூடாகவும் அச்சுப்பிரதி பதிவுத்தபால் ஊடாகவும் அனுப்பப்படல் வேண்டும். மென்பொருள் விண்ணப்பம் மற்றும் அச்சுப்பிரதியும் பரீட்சைகள் திணைக்களத்தினால் சரிபார்க்கப்படும். அதன் பின்னர் விண்ணப்பதாரருக்கு விண்ணப்பம் சரியானதா திணைக்களத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா இல்லையா என விண்ணப்பதாரர் இணையத்தை அணுகிய கையடக்கத் தொலைபேசிக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு குறுஞ்செய்தி மூலம் அறிவிக்கப்படும். தயவு செய்து பொதுவான அறிவுறுத்தல்களை தரவிறக்கம் செய்து கொண்டு விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தும் போது அந்த அறிவுறுத்தல்களை கட்டாயம் பின்பற்றுதல் வேண்டும். விண்ணப்பத்தின் அச்சுப் பிரதி எடுத்ததன் பின்னர் அதில் ஏதாவது திருத்தங்கள் மேற்கொண்டிருப்பின் அவ் விண்ணப்பம் செல்லுபடியாகும் என ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

(iii) பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். இணையத்தளம் மூலம் பின்வரும் முறைகளில் மட்டுமே கட்டணம் செலுத்தப்பட முடியும்.

(i) எந்த ஒரு வங்கியினதும் கடன் அட்டை;

(ii) இயங்கலை (online) கொடுப்பனவு வசதியையுடைய டெபிட் கார்ட்

(iii) இலங்கை வங்கியின் இயங்கலை (online) வங்கி முறைமை

(iv) இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் (கொடுப்பனவுத் துண்டு)

(v) எந்தவொரு தபாலகத்திலும்

குறிப்பு 2

மேலுள்ள முறைகள் மூலமான கொடுப்பனவிற்கான அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தில் பரீட்சைகளுக்குரிய தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் பிரசுரிக்கப்படும்.

(iv) கொடுப்பனவு கிடைக்கப்பெற்றதும் குறுஞ் செய்தி மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும் பரீட்சைக் கட்டணம் முழுமையாகச் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் பரிந்துரைக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்திற்கு மேலதிகமாக அல்லது குறைவாகச் செலுத்தப்படும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். மேலுள்ள முறைகளின் மூலம் பரீட்சைக் கட்டணக் கொடுப்பனவு மேற்கொள்ளும் போது ஏற்படும் தவறுகளுக்கு பரீட்சைத் திணைக்களம் பொறுப்பு ஏற்கமாட்டாது.

(v) ஒரு முறை செலுத்தப்பட்ட இப்பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படவும் மாட்டாது அல்லது வேறு பரீட்சைகளுக்கு மாற்றப்படவும் மாட்டாது.

(vi) விண்ணப்பதாரியின்கையொப்பம்விண்ணப்பத்திலும்,பரீட்சைக்கான அனுமதிஅட்டையிலும்உறுதிப்படுத்தப்பட வேண்டும். அரச சேவை/ மாகாண அரச சேவை/ பொதுக் கூட்டுத்தாபனம் இலிருந்து விண்ணப்பிப்பவரது கையொப்பம் அந்நிறுவனத் தலைவராலோ அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டவராலோ உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஏனைய விண்ணப்பதாரிகளின் கையொப்பமானது அரசாங்கப் பாடசாலை அதிபர் ஒருவரால்/ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரால்/கிராம அலுவலரால்/சமாதான நீதவான் ஒருவரால்/ சத்தியப்பிரமாண ஆணையாளரொருவரால்/ வழக்கறிஞரொருவரால்/ பிரசித்த நொத்தாரிசு ஒருவரால்/ முப்படைகளில் ஆணை வழங்கத்தக்க அதிகாரி ஒருவரால்/ அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரால்/ ஒரு பௌத்த விகாரையின் பிரதம மதகுருவால்/ மகாநாயக்க தேரர் ஒருவரால்/வேறு மத வணக்க ஸ்தலமொன்றின் மதகுருவால் அல்லது ஏற்றுக்கொள்ளத்தக்க மதப் பெரியாரால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

குறிப்பு : 3 பரீட்சைக்கான அனுமதி அட்டையின்றி பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள். அதில் தமது கையொப்பத்தைச் சான்றுப்படுத்தி, அதனை பரீட்சை நிலைய பிரதான மேற்பார்வையாளரிடம் விண்ணப்பதாரி கையளித்தல் வேண்டும். பரீட்சைக்கான அனுமதிப் பத்திரமொன்றை விண்ணப்பதாரி ஒருவருக்கு வழங்குதலானது மாத்திரம், அவ்விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அல்லது பதவிக்கான தகுதியைக் கொண்டுள்ளார் எனக் கருதுவதற்குப் போதுமானதாக மாட்டாது.

(vii) வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளை உடைய விண்ணப்பதாரிகளால் மட்டுமே விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன எனக் கருதி, உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் பரிந்துரைக்கப்பட்ட முறையில் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணப் பற்றுச்சீட்டுடன் விண்ணப்பப்படிவம் ஏற்கப்படும் முடிவுத் திகதியன்றோ அல்லது அத்திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பப் படிவங்கள் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் உரிய நேரத்தில் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குரிய அனுமதிப் பத்திரம் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பப்பட்டதும், உடனடியாக அது, செய்தித்தாள்கள் மற்றும் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் அலுவலக இணையத்தளத்திலும் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தால் அறிவித்தலாக வெளியிடப்படும். அவ்வறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்களுள் அனுமதிப்பத்திரம் கிடைக்காவிட்டால் அவ்விண்ணப்பதாரர், அவ்வறிவித்தலில் குறிப்பிடப்படும் விதத்தில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவனங்களுக்கான பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையுடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும். அந்த அறிவித்தலில் கேட்கப்படும் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் ஏனைய தகவல்கள் ஆகியவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரர்கள் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தொலைநகல் மூலம் பரீட்சைகள் திணைக்களத்துக்கு அறிவிக்க வேண்டும். அறிவிக்கும் போது மேலுள்ள விபரங்களையும் வேண்டுகோள் கடிதத்தையும் அனுமதி அட்டையின் பிரதியை அனுப்புவதற்கு ஒரு தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும். மேலும் பரீட்சைத் திணைக்களத்தால் உறுதிப்படுத்த வேண்டுகோள் விடுக்கப்படும் போது தம்வசம் வைத்துள்ள விண்ணப்பத்தின் பிரதியின் பிரதி, உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் பதிவுத்தபால் பற்றுச்சீட்டு பிரதி ஏதாவது தகவல் என்பவற்றையும் தம்வசம் வைத்திருத்தல் அனுகூலமாக அமையும். அனுமதிப்பத்திரம் பரீட்சைத் திணைக்களத்தின் அலுவலக இணையத்தளத்தில் பரீட்சை நடக்கவுள்ள சில தினங்களுக்கு முன்னர் பிரசுரிக்கப்படும் விண்ணப்பதாரர்கள் அனுமதி அட்டையை தரவிறக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

(viii) பரீட்சையை பிற்போடுதல் அல்லது நடத்தாது விடுவதற்கான அதிகாரத்தை ஆணையாளர் நாயகம் கொண்டுள்ளார்.

(ix) பரீட்சையை நடாத்துவது மற்றும் அதன் பெறுபேறுகளை வெளியிடுவது ஆகியன தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியால் விதிக்கப்படும் விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் பரீட்சார்த்திகள் உட்பட்டவராவார். இந்த விதிகளையும் ஒழுங்குவிதிகளையும் மீறும் பரீட்சார்த்திகள் பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியால் வழங்கப்படும் தண்டனைகளுக்கு உரியவராவார். பரீட்சைக்கான அனுமதிப்பத்திரமொன்றை பரீட்சார்த்திக்கு வழங்குதலானது விண்ணப்பதாரி அப்பதவிக்கான தகுதியைக் கொண்டுள்ளார் எனக் கருதப்படமாட்டாது. நேர்முகப் பரீட்சையின் போது அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளின் பிரகாரம் விண்ணப்பதாரி ஒருவர் தகைமையற்றவர் என்பது தெரியவந்தால் அவரது விண்ணப்பம் செல்லுபடியற்றதாக்கப்படும்.

(x) பரீட்சார்த்தியின் ஆளடையாளம் : பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்குமான பரீட்சை தொடர்பாக, அப்பரீட்சையின் பிரதான மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஓர் ஆவணம் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) தேசிய ஆளடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
(இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலும், அனைத்துப் பரீட்சார்த்திகளும் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு முகம், காதுகள் என்பவற்றை மூடாது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்துள் உட்பிரவேசிக்க அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியேறும் வரை பரீட்சார்த்தி முகத்தையும் காதுகளையும் மூடாது இருத்தல் வேண்டும்.

(xi) **பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுதல்**.- ஒவ்வொரு பாடத்திலும் 40% இற்கும் குறையாது புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளது பெயர்கள் அடங்கிய பெறுபேற்று அட்டவணையானது தொழில் திணைக்களத்தின் தொழில் ஆணையாளர் அதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் எல்லா

பரீட்சார்த்திகளுக்கும் தனிப்பட்ட முறையில் பெறுபேறு அறிவிக்கப்படுவதுடன், www.results.exams.gov.lk என்னும் இணையத்தளத்திலும் வெளியிடப்படும்.

**குறிப்பு** : 4 பரீட்சைக்கான அனுமதிப்பத்திரமொன்றை விண்ணப்பதாரி ஒருவருக்கு வழங்குதலானது மாத்திரம், அவ்விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதியைக் கொண்டுள்ளார் எனக் கருதுவதற்கு போதுமானதாகமாட்டாது.

10. பிழையான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை.- விண்ணப்பதாரி ஒருவர் தகைமையற்றவர் என்பது தெரியவந்தால், பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின்போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் செல்லுபடியற்றதாக்கப்படுவதற்கு இடமுண்டு. விண்ணப்பதாரி ஒருவர் சமர்ப்பித்த எந்தவொரு பிழையான விடயமும் அவரால் தெரிந்துகொண்டே சமர்ப்பிக்கப்பட்டது அல்லது தேவையான ஒரு விடயம் அவரால் வேண்டுமென்றே மறைக்கப்பட்டது என்பது தெரியவந்தால், அவர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவார்.

11. தொழில் அலுவலர் பதவிக்கான ஏதாவது வெற்றிடங்களை அல்லது வெற்றிடங்கள் முழுவதையும் நிரப்பாமல் விடுவதற்கும், இந்த அறிவித்தலில் தெரிவிக்கப்படாது விட்ட ஏதாவது விடயம் தொடர்பாக முடிவுகளை மேற்கொள்வதற்கும் தொழில் ஆணையாளர் அதிபதிக்கு அதிகாரம் உள்ளது.

12. இந்த அறிவித்தலானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட்டிருப்பினும், அவற்றிடையே ஏதாவது வேறுபாடுகள் காணப்படுமாயின், சிங்கள மொழி மூலமான அறிவித்தலே வலுவுடையதாகும்.

பீ. கே. பிரபாத் சந்திரகீர்த்தி,
தொழில் ஆணையாளர் அதிபதி.

தொழில் திணைக்களம்,
தொழில் செயலகம்,
நாரஹேன்பிட்டி,
கொழும்பு 05,
2021, திசெம்பர் 06.

12-401